www.padippakam.com

SECOND CLASS MAIL REGISTRATION NO:8435

2.11.90

50 சதங்கள்

# தாயகம்

"உண்மையைத் தேடி"

ISSN 0847-3749

உண்மை:2

ஜோர்ஜிக்கா தொடர்பு நிறுவன வெளியீடு

தேடல்:17

### யாழ், மன்னார் மாவட்டங்களில் வாழ்ந்த

# அனைத்து முஸ்லிம்களும் வெளியேற்றப்பட்டனர்.

## அகதிகளான முஸ்லிம்களின் சொத்துக்களை புலிகள் அபகரிப்பு

கடந்த மாதம் 31ம் திகதிக்குள் வடமாகாணத்தில் வாழும் அனைத்து முஸ்லிம்களும் வடமாகாணத்தை விட்டு வெளியேறு விட்டால் மரண தண்டனைக்குள்ளாவர் என்று புலிகள் அறிவித்ததை தொடர்ந்து யாழ்ப்பாணம், சாவகச்சேரி, மன்னார், விடத்தல் தீவு பகுதிகளில் வாழ்ந்த அனைத்து முஸ்லிம் மக்களும் அகதிகளாக வெளிமாவட்டங்களுக்கு தப்பியோடியுள்ளனர். யாழ்ப்பாணம், சாவகச்சேரி பகுதிகளில் வாழ்ந்த முஸ்லிம்கள் கொழும்புக்கும் மன்னார் மாவட்டத்தில் இருந்த முஸ்லிம்கள் புத்தளம் மாவட்டத்திற்கும் அகதிகளாக சென்றடைந்துள்ளனர். கற்பிட்டி அல் அஸ்ஹர் மகா வித்தியாலயத்தில் மன்னாரைச் சேர்ந்த 3500 அகதிகள் தஞ்சம் அடைந்துள்ளனர்.

மன்னாரிலிருந்து கொழும்பு வந்து சேர்ந்த முஸ்லிம் அகதிகளின் தூதுக்குழு மன்னாரில் வாழ்ந்த நாற்பதாயிரம் முஸலிம்களையும் பாதுகாப்பாக வெளி மாவட்டங்களுக்கு அனுப்பவும் ஆயிரக்கணக்கில் அகதிகளாயுள்ள முஸ்லிம்களை பராமரிக்கவும் அரசாங்கம் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரியுள்ளனர்.

மன்னாரில் புலிகளால் விநியோகிக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்களில் முஸ்லிம்களின் அசையும் சொத்துக்கள் அனைத்து அருகில் உள்ள பாடசாலைகளில் ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும் ஏனைய சொத்துக்கள் அனைதமும் புலிகளுக்கு சொந்தம் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எருக்கலம்பிட்டியில் வாழ்ந்த முஸ்லிம்கள் பல்லாயிரக்கணக்கான தமிழ் அகதிகளை இதுவரை காலமும் பராமரித்து வந்துள்ளார்கள். தற்போது எருக்கலம்பிட்டி முஸ்லிம்களும் அகதிகளாக புத்தளம் மாவட்டத்திற்கு சென்றதை அடுத்து முஸ்லிம்களால் பராமரிக்கப்பட்டு வந்த தமிழ் அகதிகள் நிர்க்கதியாகியுள்ளனர்.


மன்னார் பகுதியெங்கும் ஒலிபெருக்கி மூலம் அனைத்து முஸ்லிம்களும் கடந்த மாதம் 31ம் திகதிக்குள் வெளியேற வேண்டும் என்றும் தவறினால் மரண தண்டனைக்குள்ளாவர் என்றும் அறிவித்து விட்டு அகதிகளாக வெளியேறிய முஸ்லிம் மக்களிடம் நகை, பணம் ஆகியவற்றை அபகரித்ததாகவும் சிறுமிகளின் காதிலிருந்த தோடுகள் பலவந்தமாக பிடுங்கப்பட்டதாகவும் புத்தளத்திற்கு வந்து சேர்ந்த முஸ்லிம் அகதிகள் தெரிவித்துள்ளனர்.

மன்னாரில் வாழ்ந்த முஸ்லிம் மக்களின் வீடுகள் புலிகளால் சூறையாடப்பட்டதாகவும் முஸ்லிம்களுக்கு சொந்தமான கடைகளை புலிகள் பறித்துள்ளதாகவும் பள்ளிவாசல் சொத்துக்களையும் புலிகள் அபகரித்துள்ளதாகவும் பாராளுமன்றத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் அறிவித்துள்ளார்.

முஸ்லிம் மக்கள் வடக்கிலிருந்து புலிகளால் விரட்டப்பட்டது குறித்து பாதுகாப்பமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின கருத்து தெரிவிக்கையில் அகதிகளான முஸ்லிம் மக்களின் பராமரிப்பு குறித்து அரசாங்கம் உடன் சகல நடவடிக்கைகளும் எடுக்கும் எனவும் புலிகளுக்கு அரசாங்கம் தகுந்த பாடம் கற்பிக்கும் எனவும் கூறியுள்ளார்.

இஸ்ரேலியர்களின் ஆலோசனையின் பேரிலேயே புலிகள் இவ்வாறு நடந்து கொள்கிறார்கள் அலலது இஸ்ரேலியர்களை திருப்திப்படுத்த இவ்வாறு செயற்படுகிறார்கள் என்று மன்னாரிலிருந்து வந்த தூதுக்குழவின் சில உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

முன்பு மட்டக்களப்பில் புலிகள் வழிபாட்டில் ஈடுபட்டிருந்த முஸ்லிம்களை கொலை செய்தார்கள் என்ற குற்றச்சாட்டை மறுத்ததும் மொசாட் உளவாளியின் புத்தகத்தில் குறித்திருந்தது போல தங்களை மொசாட்டுடன் சம்பந்தப்படுத்தியது இஸ்லாமிய நாடுகளின் அதிருப்தியை புலிகள் சம்பாதிக்க வேண்டும் என்ற நோக்கிலேயே என்று பிரசாரம் செய்ததும் நினைவிருக்கலாம்.




## 870 மில்லியன் கேட்ட
## இலங்கைக்கு ஆயிரம் மில்லியன்

### உலக நாடுகளின் தேசிய பாதுகாப்பு நிதியா?

பாரிஸ்

ஒரு பில்லியன் டொலர்களை இலங்கைக்கு வெளிநாடுகள் உதவியாக வழங்கவுள்ளன. இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் கடந்த வியாழன் உலக வங்கியின் தலைமையகத்தில் நடைபெற்றது. கலந்து கொண்ட உதவி வழங்கும் பதினாறு நாடுகளும் இலங்கை அரச கேட்ட 870 மில்லியன் டொலர்களுக்குப் பதிலாக ஆயிரம் மில்லியன் டொலர்களை வழங்க முன்வந்துள்ளன, பலத்த இடாப்பான சூழ்நிலையில் இலங்கை அரச பொருளாதார வளர்ச்சியைப் பேணுவதாகவும் அதனாலேயே இந்த உதவிகளை அந்த நாடுகள் வழங்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளில் கனடா, இங்கிலாந்து, ஜேர்மனி, ஜப்பான் என்பனவும் அடங்கும். இலங்கையில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள் குறித்து அந்த நாடுகள் எச்சரித்திருந்தன. இவ்வாறு எச்சரிப்பதும், கவலைப்படுவதும், பின் உதவி வழங்குவதும் வருடாவருடம் நிதி வழங்கும் நாடுகள் செய்யும் வழமையான நிகழ்ச்சி என தாயகம் முன்னர் குறிப்பிட்டிருந்தது. வருடாந்தம் இந்த கூட்டத் தொடர் நடைபெறும் காலத்தில் இலங்கை சமாதான திட்டங்களை முன்வைப்பது வழக்கமாகவே இருந்தது.

மேற்படி முடிவு குறித்து இலங்கை அரசின் உயர் மட்ட பேச்சாளர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில் இலங்கை குறித்த நல்லெண்ணத்தையும் இலங்கை அரசின் தற்போதைய செயற்பாடுகள் பற்றி உதவி வழங்கும் நாடுகளின் பூரண திருப்தியையும் இது காட்டி நிற்கிறது என்றும் கூறியுள்ளார்.

தற்போதைய கோட்டை பின்வாங்கலும் இந்த உதவியை பெறுவதற்காக இலங்கை அரசு செய்த ஒரு முயற்சி என்றே கருதப்படுகிறது. இலங்கை அரசுக்கு உதவி வழங்க கூடாது என்று புலிகள் பலத்த பிரசாரம் மேற்கொண்ட போதிலும் இலங்கை அரச கேட்டதற்கு அதிகமாகவே உதவி வழங்கப்பட்டது புலிகளுடனான யுத்தத்தை துரிதப்படுத்தவே என்றும் கருதப்படுகிறது.

### குடாநாட்டில் அடைமழை

## பங்கர்களில் வெள்ளம்

### இரு தரப்பு இராணுவ நடவடிக்கைகளும் பாதிப்பு

கடந்த வாரம் குடாநாட்டில் பெருமழை பெய்ததை அடுத்து புலிகளின் பங்கர்களில் வெள்ள நீர் தேங்கியதை அடுத்து பங்கர்களில் நிலை கொண்டிருந்த புலிகள் பங்கர்களை விட்டு வெளியயேறியுள்ளனர். அதே வேளை பலாலி பகுதியில் நிலை கொண்டிருக்கும் இராணுவத்தினரும் பெருமழை மற்றும் வெள்ளப் பெருக்கு காரணமாக தொடர்ந்தும் முன்னேற முடியவில்லை என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. பெருமழை மற்றும் வெள்ளப் பெருக்கினால் புலிகளால் புதைக்கப்பட்ட பல கண்ணி வெடிகள் பெருமளவில் பாதிக்கப் பட்டிருப்பதாக கூறப்படுகிறது. வெள்ளப் பெருக்கினால் புதைக்கப்பட்ட கண்ணி வெடிகள் வெளிக்கொணரப்பட்டிருப்பதால் அவற்றை அகற்றி இராணுவத்தினர் இலகுவாக முன்னேறலாம் என்று அஞ்சப்படுகிறது.

Thayagam: A Tamil weekly published by Georgicka communications

படிப்பகம்

www.padippakam.com

## மனித உரிமை மீறல்கள் குறித்து

# இலங்கைக்கு கனடா கண்டனம்.

இலங்கையில் அடிப்படை மனித உரிமை மீறல்கள் தொடர்ந்தும் நடைபெறுவது பற்றி கனடிய வெளிநாட்டமைச்சர் ஜோ கிளாக் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தற்போதைய பிரச்சனைகளினால் வடக்கில் வாழும் அப்பாவிப் பொதுமக்கள் பலிக்கடாக்களாக்கப்பட்டுள்ளது தமக்கு கவலை அளிப்பதாகக் குறிப்பிட்டுள்ள அவர் அடிப்படை மனித உரிமைகளை மீறுபவர்களை தண்டிப்பது இலங்கை அரசின் தலையாய கடமை என்றும் கூறியுள்ளார்.

கடந்த ஜூன் 11 ஆரம்பித்த யுத்தத்தில் இதுவரை 4500 பேர் பலியாகியுள்ளார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. முன்பு முஸ்லிம்களை பள்ளி வாசலில் வைத்து புலிகள் கொலை செய்ததை கண்டித்து ஜோ கிளாக் அறிக்கை வெளியிட்டது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

இலங்கையில் மனித உரிமை மீறல்களில் புலிகளும் ஜே.வி.பியினரும் தாராளமாக ஈடுபடுவதாக ஆதாரபூர்வமாக சர்வதேச மன்னிப்பு சபை அறிக்கை வெளியிட்டுள்ளது.

## இலங்கைக்கு ஜப்பான் உதவி

டோக்கியோ

இலங்கைக்கு முன்னூறு மில்லியன் டாலர்களை நிதி உதவியாக ஜப்பான் வழங்க உள்ளது. மத்திய கிழக்கு நிலைமைகளினால் ஏற்பட்ட மாற்றங்களினால் உண்டான எரிபொருள் விலை உயர்வைச் சமாளிக்கவே இந்த உதவி வழங்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. ஈராக் மீதான பொருளாதார தடைகளை இலங்கையும் அமுல்படுத்துவதாலும் மத்திய கிழக்கில் இருந்து ஆயிரக்கணக்கான இலங்கையர்களின் வருமானத்தை இலங்கை இழந்துள்ளதாலும் இந்த உதவி வழங்கப்படுவதாக தெரிவிக்கின்றது.

## கிழக்கில் சிங்களவர்கள் புலிகளால் கொலை

கிழக்கில் நான்கு சிங்கள பொதுமக்கள் புலிகளால் கொல்லப்பட்டனர். திரும்பவும் உக்கிரமடைந்த சண்டைகளை அடுத்து புலிகள் சிங்கள மக்கள் மீது தாக்குதலை அதிகரித்துள்ளனர். புல்மோட்டையில் சிங்கள மக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்தே இந்த தகவல்கள் வெளியாகியுள்ளன. காடுகளில் ஆயுத பாணிகளாக அலையும் புலிகள் தற்போது சிங்கள இராணுவத்துடன் மோதுவதைத் தவிர்த்து சிங்கள பொதுமக்கள் மீது தாக்குதல்களை நடத்த தொடங்கியுள்ளனர்.

## வாமதேவன் கைதானர்

பம்பாய்

வாமதேவன் கைதானர். இலங்கையரான இவர் போதைப் பொருட் கடத்தல் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ளார். புளொட் இயக்கத்தின் முக்கியஸ்தராகவும் உமா மகேஸ்வரனின் உதவியாளராகவும் முன்னர் விளங்கிய இவர் புளொட் இயக்கத்தில் கப்டன் குமார் என்ற பெயரில் நடமாடி பல கொலைகளுக்கும் சித்திரவதை முகாம்களுக்கும் பொறுப்பாக இருந்தவர்.

இவர் காலஞ்சென்ற தந்தை செல்வாவின் கார் சாரதியாக இருந்தவர். இந்திய இராணுவத்திடம் பயிற்சி பெற்ற இவர் போதைவஸ்து கடத்தலில் பெரிய மனிதரான வரதராஜ முதலியின் முக்கிய அடியாளாக இரும்தது குறிப்பிடத்தக்கது. இவர் கைதான போது நான்கரை வட்சம் ருபா பெறுமதியான ஹெரோயின் இவரிடமிருந்து பொலிசாரால் கைப்பற்றப்பட்டது.

## குஜரால் விஜயம் ரத்து?

புது டில்லி

இந்திய வெளிநாட்டமைச்சர் குஜராலின் இலங்கைக்கான. விஜயம் ரத்து செய்யப்படலாமென புது டில்லி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அயோத்தியில் மூண்டுள்ள மோசமான இந்து முஸ்லிம் கலவரங்களினால் வி.பி.சிங்கிற்கு ஏற்பட்ட நெருக்கடிகளால் தலைநகரில் உருவாகியுள்ள அரசியல் கொந்தளிப்பை அடுத்து குஜராலின் இலங்கை விஜயம் ரத்து செய்யப்படலாம் என்று கூறப்படுகிறது.

நவம்பர் ஏழாம் திகதி அன்று வி.பி.சிங் அரச மீது நம்பிக்கையில்லா தீர்மானம் நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது.

## குவைத் அகதிகள் நாடு திரும்புகிறார்கள்.

குவைத்தில் அகதிகளான ஒரு லட்சத்துக்கும் அதிகமான அகதிகளில் எண்பதாயிரம் பேர் இருவரை நாடு திரும்பியுள்ளனர் என்றும் சில தினங்களில் மேலும் பத்தாயிரம் பேர் நாடு திரும்பவுள்ளதாகவும் வெளிநாட்டமைச்சு கொழும்பில் செய்தி வெளியிட்டுள்ளது.

### உயிராபத்து என்றாலும்

## படைகளில் சேர சிங்கள இளைஞர்கள் தயார்

ஆயுதப்படையினரின் கடமை இன்றைய நிலையில் ஆபத்துக்கள் அதிகமுள்ளதாக மாறியிருப்பினும் இராணுவத்தில் சேர விரும்பும் இளைஞர்களின் ஊக்கம் அதிகரித்துள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் பத்திரிகைகளில் வெளிவந்த விளம்பரங்களை அடுத்து எட்டாயிரம் விண்ணப்பங்கள் சேர்ந்துள்ளதாகவும் நவம்பர் மாதமளவில் நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டு 300 இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட உள்ளது எனவும் மேலும் அவ்வட்டாரங்கள் கருத்து தெரிவித்தன.

## வானொலி கேட்டால் தண்டனை

யாழ்ப்பாணத்தில் மக்கள் வானொலி கேட்பதை புலிகள் தடை செய்வதாக டெயிலி நியூஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. இதை மீறுபவர்களுக்கு தண்டனை அளிக்கப்படுகிறதாம். கேட்பவர்களின் காதுகளில் கொதிக்கும் எண்ணெய் ஊற்றப்படுவதாகவும் டெயிலி நியூஸ் தெரிவித்துள்ளது.

## துணுக்காயில் தொடரும் சித்திரவதை

துணுக்காயில் உள்ள புலிகளின் சித்திரவதை முகாமில் கைகள் வழங்க முடியாத நிலையில் கடும் சித்திரவதையின் பின் விடுவிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தினர் ஒருவரின் தகவலின்படி இநத முகாமில் உள்ள நான்காயிரம் பேருக்கும் ஒரு நேர உணவே வழங்கப்படுகிறது. முதுகு நிமிரமுடியாதபடி அடைக்கப்பட்ட கூடுகளிலும் பதுங்குகுழிகளிலும் 150 பேர் வீதம் பகுதி பகுதியாக 4,000 பேரும் வைக்கப்பட்டுள்ளனர். குழிக்குள் உள்ளவர்கள் மலம் கழிக்க ஒரு வாளி கொடுக்கப்படுகிறது.

## மு.க.முத்து கட்சி தாவினர்

சென்னை

தமிழக முதல்வர் மு.கருணாநிதியின் மூத்த மகன் மு.க.முத்து தந்தையின் கட்சியான தி.மு.கவிலிருந்து அ.தி.மு.கவிற்கு கட்சி மாறியுள்ளார். முன்னாள் சினிமா நடிகரான மு.க.முத்துவை முரசொலி மாறனும் மு. கருணாநிதியும் திட்டமிட்டு ஒதுக்கியதாலேயே அவர் கட்சி மாறினார் என்று சென்னை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் தாங்கள் புலிகளுக்கு நூறு வீத ஆதரவு தரவுள்ளதாக அ.தி.மு.க அறிவித்துள்ளது. அதே வேளை தி.மு.கவின் தமிழீழ பிரதிநிதி என்று அழைக்கப்பட்ட நடிகை ராதிகா பிரிட்டிஷ் பிரஜை ஒருவரை மணந்ததை அடுத்து அரசியலுக்கு முழுக்குப் போட்டு தற்போது ஐக்கிய இலஙகையே ஒரே தீர்வு என்று கூறிவருகிறார்.

## அரசு-புலி மோதல்

கொழும்பு

புலிகளின் முகாம் ஒன்று நிர்மூலமாக்கப்பட்டதாகவும் இருபது புலிகள் கொல்லப்பட்டதாகவும் இராணுவத் தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன. திருகோணமலை மாவட்டத்தில் உள்ள வெருகல் பகுதியில் பத்து கட்டிடங்களும் நிலத்துக்கு கீழ் அமைக்கப்பட்ட பங்கர்களும் நிர்முலமாக்கப்பட்டுள்ளன. இந்த தாக்குதலலில் அரசபடை விமானங்களும், கனரக துப்பாக்கிகள் பொருத்தப்பட்ட ஹெலிகொப்டர்களும் இந்த தாக்குதலில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

## கனடிய அகதிகளின் அவலம்

ரொறன்ரோ ஸ்டார் பத்திரிகை சென்ற வாரத்து ஆசிரிய தலையங்கம் ஒன்றில் கனடாவில் தஞ்சம் கோரியிருக்கும் அகதிகளுக்கு பொதுமன்னிப்பு அளிக்க வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது.

88 ம் ஆண்டின் இறுதிக்கு முன் வந்தவர்களில் ஒரு லட்சம் பேர் நான்கு வருடங்கள் தங்கள் விசாரணைகளுக்காக காத்திருக்கவேண்டியுள்ளது. கனடாவின் திருச்சபைகளுக்கான சபை சர்வதேச சிவில், அரசியல் உரிமைகளுக்கான ஒப்பந்தத்தை இந்த செயல் மீறுகிறது என்று கண்டித்துள்ளது. இவ்வாரம் ஜெனீவாவில் நடைபெற்ற ஐ.நா மனித உரிமைகள் சபை இவ்வாறான கருததுக்களை எழுப்பியிருந்தது.

குடிவரவு அமைச்சர் பொதுமன்னிப்பை வழங்குவதன் மூலம் எமது கௌரவத்துக்கு ஏற்பட்ட இழுக்கை நீக்கலாம். சட்டத்தை பாதுகாக்க வேண்டும் என்ற காரணம் காட்டி அமைச்சர் அதை மறுக்கிறார். இந்த திட்டத்துக்கு 179 மில்லியன் செலவாகிறது. 70 வீதமானவர்கள் திருப்பி அனுப்பபடுவார்கள் என்று முன்பு கூறப்பட்டது. ஆனால் உண்மையில் அப்படியல்ல. திருப்பி அனுப்பப்பட கூடியவர்கள் இருபதாயிரம் மட்டுமே. இதற்கு எவ்வளவு செலவாகும்?

இந்த தேக்கத்தை நீக்குவதன் மூலம் அரசு அந்த பணத்தை வேறு நல்ல வழிகளில் பயன்படுத்தலாம் என்ற கருத்துப்படஅந்த ஆசிரியர் தலையங்கம் எழுதப்பட்டுளளது.

88 மார்கழிக்கு முன் வந்தவர்களில் 447 பேர் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். 608 பேர் நிராகரிக்கப்பட்டிருக்கிறார்கள். 115 பேர் திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறார்கள். 16, 179 பேர் முடிவுகளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு லட்சம் பேர் விசாரணைக்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

தை 89க்கு பின்வந்தவர்களில் 4599 பேர் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். 1618 பேர் நிராகரிக்கப்பட்டிருக்கிறார்கள். 10,784 பேர் முடிவுகளுக்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள். 7994 பேர் விசாரணைகளுக்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

## யாழ் நோயாளிகள் கொழும்பிற்கு

யாழ் வைத்தியசாலை தொடர்ந்து இயங்க முடியாமல் இருப்பதால் அங்கு சிகிச்சை எதுவும் இன்றியும் அவசர சிகிச்சை தேவைப்படுவோரையும் கொழும்புக்கு அழைத்து புனர்வாழ்வு அவை அமைச்சு முயற்சிக்கு மேற்கொண்டுள்ளது. இது தொடர்பாக செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகளிடமும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

உத்தேச திட்டத்தின்படி உணவுப் பொருட்களை யாழ்ப்பாணம் கொண்டு செல்லும் கப்பல்களில் நோயாளிகள் கொழும்புக்கு கொண்டு வரப்படுவா.

யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலையில் இருந்து பெரும்பாலான உபகரணங்கள் ஆயுதம் தரித்த நபர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதால் வைத்தியசாலையை சரியாக இயங்க வைப்பதற்கான சாத்தியம் இல்லை எனவும் அமைச்சின் உயர்அதிகாரி தெரிவித்துள்ளார்.

## சத்துருக்கொண்டான் படுகொலை பற்றி

## மேலும் தகவல்கள்

அண்மையில் சத்துருக் கொண்டானில் நடைபெற்ற கொலைகள் பற்றி தாயகம் வாசகர்களுக்கு அறிவித்திருந்தது தெரிந்ததே. கொழும்பு பத்திரிகைகளினாலும் அரசினாலும் மூடி மறைக்கப்பட்ட இப்படுகொலை பற்றி எமது மட்டக்களப்பு நிருபர் தெரிவிப்பதாவது:

சம்பவதினமன்று இருட்டியதும் சத்துருக்கொண்டான் இராணுவ முகாமுக்கு அருகிலுள்ள ஏழை மீனவ மக்கள் வாழும் பகுதியை சென்றடைந்த சில முஸ்லிம் ஊர்காவல்படையினர், இராணுவ முகாமை நோக்கி அனைவரையும் அடையாள அட்டையுடன் வருமாறு இராணுவ அதிகாரிகள் அழைப்பதாக கூறினர். அப்பாவி மக்கள் தமது அடையாள அட்டைகளுடன் இராணுவ முகாமுக்கு சென்ற போது, முகாமின் வேறு ஒரு பாதை வழியாக செல்லும்படி ஒருவர் பின் ஒருவராக அனுமதிக்கப்பட்டனராம். தம்மை அதிகாரிகள் பரிசோதிக்கப் போகிறார்கள் என மக்கள் நம்பினர். ஆனால் பாதை திருப்பத்தில் வைத்து ஒவ்வொருவராக நீண்ட வாளினால் கழுத்துச் சீவிக் கொல்லப்பட்டனர். தலை ஒழுங்காக வெட்டப்படாது உயிருடன் துடித்தவர்களை உடனே மீண்டும் வாளினால் குத்திக் கொன்றிருக்கிறார்கள். தலைகள் கூரிய வாளினால் சீவப்பட்டதால் சத்தம் எழாதிருக்கவே ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் இவ்வாறு கொல்லப்பட்டனர். தாய், தந்தை, சகோதரர்கள் அனைவரையும் இழந்து உயிர்தப்பிய ஒரேயொருவரான 22 வயது வாலிபர் ஒருவர் மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு வந்து சேர்ந்தார். அவர் சொன்ன தகவல் வெளியில் வந்ததும் டெலோ இயக்கத்தினர் அவரை வந்து மிரட்டியதுடன் இராணுவமும் அவர்களும் சேர்ந்து உடனடியாக சடலங்களை அப்புறப்படுத்தி தடயங்களையும் அழித்து விட்டனர். டெலோ இயக்கம் மட்டக்களப்பில் இராணுவ முகாமில் இருந்து இயங்கிவருகிறது. பாராளுமன்றத்திலும் பத்திரிகையாளர்களாலும் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு எதுவுமே நடக்கவில்லை என அரசு பதிலளித்துள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

# கவிக்கோலம்

## தொலைந்து போன தேசம்.

உனக்கு ஒரு குடிசை
உக்கிய சைக்கிள்
காதலிக்க நம் கன்னிகையர்
ஒளித்துப் போவதற்கு
ஆனைக்கோட்டையில் கள்ளு ஜொயின்ற்
மனிதுயரை சகிக்க இன்னும் பல
உனக்கிருந்தன.

எலும்புருக்கும் குளிரில்
கசக்கிப் பிழிந்து
சக்கை உமிழும்
மேற்குலக தொழிலகத்தில்
சதைகரைய
வாழ்வின் முடிவை
நோக்கி பயணம்

தவழ்ந்த மண்ணில்
மீண்டும் கைவீசி நடக்க முடியுமோ?

எதிரிக்கு வேண்டுமானால்
நீ உச்சலாம்
முடியுமோ உச்ச
நம் வீரப்போராளிகளை?
தங்கம் தா, பங்கர் வெட்டு!
வாயைத் திறந்தால்
விழுங்க துப்பாக்கிக் குண்டு.

ஒன்றை மட்டும் தான் செய்யலாம்
புத்திசாலித்தனமாய்
உனது தேசத்தையே மறந்து விடலாம்
அம்மாவின் எலும்புகளையும் சதைகளையும்
புழுக்கள் தின்னட்டும்.

ராகவந்தர்

## அ+இ+எ(ன்றும்)

பட்டங்கள் பல பெற்று
சொத்துக்கள் சுகமும் சேர்த்து
திட்டமிட்டு வாழ்வும் நடாத்தி
திராவிட நாடதனில்
திகழ்வுடன் திடகாத்திரமாய்
இருந்த காலது!

பட்டறையில் பலர்
வியர்வை சிந்த
எட்டமதில் எட்டுக் கால்களுடன்
பார்வையதை பதிய விட்டு
பணம் சேர்க்கும்
பதவிக் காலமது!

கட்டிய கால்வாயினுள்
வெட்டியவன் நீர் மொள்ள
எட்டி உதைத்து
எட்டடி தூரத்தில்
கட்டிய கைகளுடன்
தலைவணக்கம் செய்த காலமது.

நெட்டி முறித்து
எழுந்து நின்று
நடை பயின்று
பட்டங்களை பறக்க விட்டு
பனிக்குளிரில்
போர்வைகளைச் சுமந்து
பட்டறையில் பல் இளிக்க
பணிபுரியும் காலமிது

சாதிக்குழப்பங்கள்
சண்டித்தனப் பேச்சுக்கள்
சீதனப் பேச்சுக்கள்
சீட்டு ஒழிப்புகள்
வட்டி, வகையறுக்களுடன்
வாழும் காலமிது

குனிந்த பொழுதும்
நிமிர்ந்த பொழுதும்
"நான்" என்னும்
அகங்காரம் இன்னமும்.....

-ரசிகன்-

## சுய நலம்

ஏறி வந்த ஏணி இனித் தேவையில்லை
என்று எட்டி உதைக்க என்னால் முடியவில்லை
அது தான் ஏணியைக்
கட்டிப்பிடித்துக் கொண்டு நிற்கிறேன்.

நான் மற்றவர்களை விட வேறுபட்டு நிற்கிறேனா?

அது தான் இல்லை
கீழே நான் இறங்கி வருவதற்கும்
அந்த ஏணி தானே தேவைப்படுகிறது

எல்லாமே சுயநலம் தான்.

தமிழ்யா

## உறுதி கொள் மனமே

உதயங்கள் வரும்போது
அஸ்தமனங்கள் நிச்சயம் வந்து போகும்
நிஜங்கள் வரும் போது
நிழல்கள் நிச்சயம் வந்து போகும்
நினைவுகள் வரும் போது
கனவுகள் நிச்சயம் வந்து போகும்
உறவுகள் வரும் போது
அனுபவங்கள் நிச்சயம் வந்து போகும்
அழுவதாலும் அடங்கியருப்பதாலும்
உறவுகள் தொடர்ந்து விடாது
உறுதி கொண்ட மனம் வரும் போது
உறவுகளின் பின் அனுபவங்கள் தொடரும்

விஜி.

## கருவாடு கலாசாரம்

பதினாறு பருவம்
பாவாடையோடு
பூவாடை வீசி
பார்த்தோர்கள் ஏங்க
பூத்தங்கே நிற்க வீசும்
காற்றோடு இளமை
கரைந்தே நாள் போக
கானல் நீராக கற்பனைகள் போக
கோலங்கள் மெல்ல
காலத்தால் காய
முப்பதும் வந்து மூப்பதுவும் காண
முடியழகு மெல்ல உதிர்வடைந்து
வெள்ளை இழை படர்ந்தபின்
விழாக்கோலம் அங்கு

தாரதேசம் போய் கூடப்பிறந்தது
தாளை கடத்தியோ தோளை வருத்தியோ
ஆராரோ சொன்ன அப்பன்
ஆர் ஆரோ கால் பிடித்தோ
ஆராத்தி அலங்காரம்
ஆரணங்கின் மணக்கோலம்

பட்டணத்தில் படித்து
பட்டங்கள் பெற்றுவிட்ட
புத்தியாய் சீவிக்கும்
புத்திரனும் மாப்பிள்ளை
வருடங்கள் போனாலும்
வயதுகள் சென்றாலும்
நாலுவகை சீதனமும்
காணிநிலம் வீடுமென
கல்வியே கண்டிடாத
கல்யாண தரகராலே
புடித்த கொப்பு புளியாக
புத்திஜீவி மணக்கோலம்

நாலு பக்கம் கடல் இருக்க
நல்ல சுவை மீன் கிடைக்க
காய்ந்து விடட கருவாட்டை
கழிப்புடன் சுவைத்து விடும்
கலாசாரம் எங்களது.

கட்டியே காத்திடுவோம்

றூபவி

## அன்பே

கல்லறை கீதமிசைத்தது போதும் வா
தென்றலுக்கு முகவுரை எழுதுவோம்
கோடையில் நின்றது போதும் வா
வசந்தத்திற்கு கடிதம் எழுதுவோம்
வரதட்சணை பிச்சை எதற்கு வா
வேண்டாம் வரதட்சணை என
பெற்றோருக்கு எழுதுவோம்

காலத்தின் தீர்ப்புக்காய் கண்ணியமாக
கண்ணீர் கூண்டிலே நிற்போம்

உறுதியான காதலே எதிர்காலத்திற்கு
கூரையாகும்

அதுவரை கொட்டுகின்ற மழை கொட்டட்டும்

குமாரி மொனிக்கா



படிப்பகம்

www.padippakam.com

## ஈசாப் கதைகள்

### பீமனும் குபேரனும்

-நரேன்-

பீமன் தேவலோகத்திற்கு போனான். அங்கே இருந்த தெய்வங்களையெல்லாம் வணங்கினான். ஆனால் குபேரனை மட்டும் வணங்கவில்லை. குபேரனை மட்டும் வணங்காத காரணம் என்ன என்று குரு பகவான் கேட்டார். அதற்கு பீமன் "பூலோகத்தில் இந்த குபேரன் அயோக்கியர்களோடு உறவாடிக் கொண்டிருந்ததை நான் பார்த்தேன். அப்பேர்ப்பட்டவனோடு தேவலோகத்தில் நான் பேசுவது கௌரவமாய் இருக்குமா என்பது எனக்கு சந்தேகமாக இருந்தது." என்று சொன்னான்.

பணமும் கௌரவமும் சேர்ந்து போவது அபூர்வம்

கடந்த வாரங்களாக "மண்ணில் பதிந்த இரத்த தடங்கள்" காவியத் தொடர் வெளிவரவில்லை. அடுத்த வாரத்தில் இருந்து இந்த தொடர் தொடர்ந்தும் வெளிவரும்.

## இது எப்படி இருக்கு....

ஆண் கேட்டை அரசாளும் என்பது சோதிட வாக்கு
கெட்ட குடிக்கு ஒரு கேட்டை என்பார்கள்.
கேட்டையில் ஆண் பிறந்தால் கோட்டையைப் பிடிப்பான் என்பதும் மரபுவழி வந்த உண்மை.
கேட்டையில் பிறந்த பிரபாகரன் கோட்டையைப் பிடித்து விட்டார்
கோட்டை வெற்றி மூலம் புரட்சித் தலைவன் என்ற சிறப்பையும் தன் மானம் உள்ள தமிழர்கள் மூலம் பெற்றுள்ளார். கோட்டை பிரபாகரன் கையில் வீழ்ந்த தினமாகிய 26.9.90 இன் பகல் 11 மணி 27 நிமிடங்கள் வரையும் "கேட்டை நட்சத்திரத்துக்குரிய நேரம்,யாழ்ப்பாணத்தில் என்பதும் குறிப்பிடத்தக்கது." கிரகங்கள் மனிதர்களை வழிநடத்தும் உண்மைகளை சுட்டிக் காட்டவே சோதிட உண்மைகளை எழுதுகிறேன்.

புரட்சித் தலைவன் பிரபாகரனுக்கு 1983 தொடங்கிய ஏழுரைச் சனி,14.12.90 இல் நீங்கி விடும். ஏழரைச் சனி கழியும் காலம் பெரும் அழிவுகளைக் கொடுத்து, ஈற்றில் மாபெரும் வெற்றியைத் தந்து சனீஸ்வரன் நீதி தேவன் என்ற தன் உயர்ந்த தர்மக் குணத்தை உலகுக்கு சனி நிரூபிப்பார். இது தெய்வீகக் கண்ணோட்டம் கொண்ட மனித குலத்திற்கு புலப்படும் உண்மை.

ஒரு துளி நீராகாரம் கூட அருந்தாமல், தமிழினத்திற்கு அர்ப்பணித்த தியாகி, பொன்மனச் செம்மல் திலீபனின் உயர் பிரிந்த நாள் அன்று திலீபனின் ஆவி, பாவிகளின் படை, குலை நடுங்கி ஓட வைத்தது. தன் உயிரைக் கொடுத்து திலீபன் இறைவனிடம் கேட்ட வரம் உயிர் பிரிந்த 26ம் திகதி இறைவன் கொடுத்து விட்டார். 26ம் திகதிக்கு மற்றொரு சிறப்பும் உண்டு. புரட்சித் தலைவர், வணங்காமுடியோன், சிங்களவர்க்கு சிம்ம சொப்பனன் பிறந்த திகதியும் 26ம் திகதி அல்லவா.

தமிழருக்கு சொந்தமான கிழக்கிலங்கை, வட இலங்கையுடன் இணைந்து தமிழ் ராஜ்யம் ஏற்படும். தர்மம் ஒருதலைப் பட்சமானதல்ல. பாண்டவர்களின் பூமியை மீண்டும் பாண்டவர்களிடம் பெற்றுக் கொடுத்திட இறைவன் பறித்த மனித குல உயிர்கள் கொஞ்சமா? தர்மனும் தம்பிமார்களும் மண்ணை மீட்டிடவே தமது ரத்த உறவு முறை கொண்ட துரியோதனனையும் தம்பிமார்கள் நூற்றொரு பேர்களையும் கொன்றொழித்தே நாட்டை மீட்டார்கள்.

(சோதிடக் கலாநிதி ஒருவர் கேட்டையும் கோட்டையும் என்ற பெயரில் செய்த சோதிட புலனாய்வு துண்டுப் பிரசுரத்தில் இருந்து)

உண்டியல் தூக்கிச் சென்ற போலிச் சாமியார்கள் துரத்தப்பட்ட போது பிடிசாபம் என்று நிலக்கீழ் வாகனம் நிறுத்துமிடத்திற்கு சென்று பல வாகனங்களின் டயர்களை குத்திக் கிழித்தார்களாம். போராட்டப் பணத்தில் காரோட்டும் இவர்களுக்கு உழைத்து பொருட்களை வாங்கினால் தானே அதன் அருமை விளங்கும். இவர்கள் ஏன் "தியாகிகளா"காமல் "செம்மல்கள்" ஆகத் துடிக்கிறார்களோ புரியவில்லை?

புதிதாய் பேரேடுகள் முளைக்கவிருக்கின்றனவாம். எல்லாமே புதிய தோல் போர்த்திய "அதே" தான் என்று பேச்சு அடிபடுகிறது. பெரியவர்களின் ஆசியுடன் தான் என்று கேள்வி. இங்கும் "ஈழநாசமோ?"

தீவுக்காரரின் வயிற்றில் புளியைக் கரைக்கவோ என்னவோ, ஏரிக்கரை மேல் போனவர் தானும் சிற்றேடு விட முயல்கிறாராம். seeking new identities?

பெரியாரின் கழகப் பெயரில் ஒரு சிற்றேடு வர இருப்பதாக கேள்வி. நடுநிலையோ? கரைநிலையோ?

பண்டித அரசியல் ஞானியின் தந்தையார் நாட்டின் தென்பகுதியில் வியாபாரமாம். மைந்தன் இங்கே அரசியல் அவதானி. தந்தையார் சிங்களவரிடம் மண்மீட்பு நிதி சேர்க்கிறாரோ?

மீண்டும் அடிப்படைகளுக்கு..

## இனப்பிரச்சனையின் வளர்ச்சி

-சித்தார்த்தன்-


இலங்கையில் ஆரம்பித்த பிரச்சனை பொருளாதாரத்தையே அடிப்படையாகக் கொண்டது எனக் கண்டோம். தர்க்க ரீதியாக ஆராய்ந்து அறியக் கூடிய உண்மை இது. ஆனால் வெறும் தர்க்கமும் ஒரு சமூகத்தின் வாழ்வும் வேறு வேறு. வாழ்க்கை என்பது உயிர் தப்பிப் பிழைத்தல் பற்றியது. வெள்ளையர்களின் ஆட்சியின் கீழ் நமக்கு சேர வேண்டிய பங்கினை விடக் கூடுதலாக அனுபவித்துக் கொண்டிருந்தோமே, இனி சிங்கள மக்களுக்கும் ஓரளவு விட்டுக் கொடுப்போமோ என தமிழ் சமூகம் பரந்த மனதுடன் (இது என்றுமே தமிழ் சமூகத்துக்கு இருந்ததில்லை) பொருளாதாரச் கோணத்தில் இப்பிரச்சனையை நோக்கியிருக் நியாயமில்லை. மாறாக அனுபவித்த வந்த சலுகைகள் சிறுகச் சிறுகப் பறிபோக ஆரம்பிக்க, இவர்கள் மனதில் ஒரு வித எதிர்ப்புணர்வும் அன்னியத் தன்மையும் முளைவிடத் தொடங்கின.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் இன, மத பேதங்களுக்கு மேலாக நின்று தேசிய ஒருமைப்பாட்டையும் இனங்களுக்கு இடையிலான பரஸ்பர புரிந்துணர்வையும் வளர்க்க கூடிய அளவுக்கு தொலைநோக்கு கொண்ட சிங்கள தலைவர்களின் தலைமை இல்லாது போனது நமது நாடு செய்த மிகப் பெரிய துர்ப்பாக்கியமே. இப்பிரச்சனை முளைவிடத் தொடங்கிய நேரத்திலேயே இதை சீர் செய்யாமல் விட்டு விட்டதுமல்லாமல் இப்பிரச்சனையை மோசமாக்குவதில் போட்டி போடுவதையே ஆட்சியைப் பிடிக்கும் ஏணிப் படியாக மாற்றியதால் நாட்டின் போக்கே திசைமாறியது. சிங்கப்பூரைப் போல் அரசியல் கட்டுக்கோப்பும் பொருளாதார சுபீட்சமும் கொண்டு முன்னேறி வரும் மூன்றாம் உலக நாடுகளுக்கு ஒரு மாதிரியாக இருக்க வேண்டிய இலங்கை இன்று சின்னாபின்னமாகி சிதைந்து நலிந்த நிலையில் உள்ளது. நாடு எக்கேடு கெட்டால் என்ன என இலங்கையில் வாழும் தமிழர்கள் வாளாவிருந்து விட முடியுமா?


( ம் பக்கம பார்க்க )

## வில்லர் பாட்டு : "ஆமா! ஆமா!!"

### காட்சி 1




### காட்சி 2








படிப்பகம்

www.padippakam.com




சர்வதேச தமிழர் கற்பனைச் சிற்றேடு

# கற்பனை


## காகம் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது.
## சாம் ஏவுகணை சாகஸம்

கோட்டைப் பக்கமாக பறந்த காகம் ஒன்று சாம் ஏவுகணையாலேயே சுட்டு வீழ்த்தப்பட்டதாக வெளிநாட்டு தொலைபேசி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது. வெகுகாலமாக தாங்கள் பத்திரமாக வைத்திருந்த சாம் ஏவுகணை ஒன்றை உபயோகித்து இக்காகத்தை தாங்கள் துரத்தித் துரத்தி சுட்டுத் தள்ளியதாகவும், காகம் தலைகீழாக காக்கைதீவுக் கடலில் விழுந்ததாகவும் இந்நிறுவனம் தெரிவித்தது.

இந்த சாம் ஏவுகணை பறப்பதற்கான ஆணி ஒன்றை தங்களுக்கு விற்ற நிறுவனம் தராது விட்டதாலேயே பல காலமாக தாங்கள் இதை உபயோகிக்கவில்லை என்றும் முன்னர் தெரிவித்த இவர்கள் இப்போது அந்த ஆணி எப்படி கிடைத்தது என்பதை தெரிவிக்கவில்லை. சிங்கள உளவாளியான இந்த காகம் சிங்களவருக்கு உதவவே பறந்தது என்பதால் இக்காகத்தை சுட்டதாக தெரிவித்தனர். அதன் பின்னர் பல காகங்கள் சிங்களவருக்கு உதவ பறந்த போதும் அக்காகங்களை ஏன் சாம் ஏவுகணையால் சுடவில்லை என்ற கற்பனை நிருபரின் கேள்விக்கு யாராலும் பதில் அளிக்க முடியவில்லை.

இதற்கிடையில் பறந்த காகம் காக்கைவலிப்பு வந்ததாலேயே விழுந்தது என நடுநிலைப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டதால் அப்பத்திரிகை பலமாக மிரட்டப்பட்டது.

பின்பு கிடைத்த செய்திகளின்படி ஆணிக்கு பதிலாக சாம் ஏவுகணைக்கு "குமார் குண்டூசி" பாவித்தே தாக்குதலை மேற்கொண்டதாக பாரிசில் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பொன்று தெரிவிக்கிறது.




### அந்த ஈழம் வேண்டாம்..
## தலைவர் மறுப்பு

வெகுகாலமாக சகல தமிழ் மக்களாலும் முன்னெடுக்கப்பட்டு பல்வேறு பரிமாணங்களுக்கூடாக வளர்க்கப்பட்ட தமிழ் ஈழம் வேண்டாம் என தலைவர் மறுத்து விட்டார். இது பற்றி பல புதிய தகவல்கள் கிடைத்துள்ளன.

ஜனநாயக வழியில் உருவாக்கப்படும் தமிழ் ஈழத்தை பெற்றுக் கொள்ளும் முயற்சியில் பலர் இறங்கிய போதும் அந்த துரோக முயற்சி தலைவராலும் அவரது சகாக்களாலும் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டுள்ளது. சகலரும் தமிழ் ஈழத்தைப் பெற முடியாது என்றும் நாமே தனித்துப் போராடுவோம், இம்முயற்சியில் நாங்கள் தோல்வியுற்றால் அது தமிழ் மக்கள் அனைவரதும் தோல்வியாகும், எனவே அனைவரும் எங்களுக்கு மட்டுமே ஆதரவு தர வேண்டும் என தலைவர் அறிக்கை விட்டுள்ளார்.

இதற்கிடையில் வெகுகாலமாக தமிழ் மக்கள் வீணே அழிவதையிட்டும், தலைவரதும் அவரது சகாக்களினதும் தலைமை ஆசையினாலேயே தமிழ் மக்கள் வீணே பலியிடப்படுவதையும் அதிசயப்படத்தக்க விதமாக பிரேமதாசா உணர்ந்து கொண்டு தமிழ் ஈழத்தை தலைவரிடம் வழங்க முன்வந்ததாகவும் அதற்கு தலைவர் மறுத்து விட்டதாகவும் தெரியவருகிறது. சும்மா கிடைக்கும் எதையும் பெற்றுக் கொள்ளப் போவதில்லை, தமிழ் ஈழத்தை அடித்தே பறிப்போம்" என்று வீரமுழக்கமிட்டதாகவும் கற்பனை நிருபர் தெரிவிக்கிறார். கோட்டையில் கொடி பறந்தவுடன் தமிழ் ஈழம் கிடைத்து விட்டது போல் பல வெளிநாட்டு துரோகிகள் மகிழ்ந்திருக்கிறார்கள். இது தமிழ் ஈழப் போரட்டத்தை கொச்சைப்படுத்துவதாகும். நாங்கள் ஆயுதப் போராட்டம் மூலமே ஈழத்தைப் பெற்றுக் கொள்ளுவோம் என பல தடவை வாக்குறுதியளித்திருந்தோம். பல பேச்சுவார்த்தைகளை குழப்பி இதை நிருபித்திருந்தோம். இந்த ஆயுதப் போராட்டத்தை தவிர வேறு எதையும் பரிசீலிக்க நினைப்பவர்கள் வளர்ப்பு பிராணிகள், கைக்கூலிகள் என்றும் கூவப்பட்டது.

மேலும் அனைவரையும் பதுங்குகுழிகள் வெட்டுமாறும் பதுங்குகுழியில் வாழ தமிழ் மக்கள் பயின்று கொள்ள வேண்டும், பதுங்குகுழிகளை அதிகமான ஆழத்தில் வெட்டுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. பதுங்குகுழிகளாக உபயோகிக்க முடியாத பட்சத்தில் அது புதைகுழிகளாக பிணங்கள் புதைக்க உதவும் என்றும் அவற்றின் உபயோகங்கள் பற்றி ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

### சின்னக்கடை சீனி முகமது சத்திரசிகிச்சை நிபுணர்!
### பரியாரி பஸ்தியாம்பிள்ளை வைத்தியபீடத்தலைவர்!!
## மாவாட்டப் பொறுப்பாளரின் சாதனை!!!

யாழ்ப்பாணத்து பிரதம சத்திரசிகிச்சை வைத்திய அதிகாரியாக திரு.சீனி முகமது நியமிக்கப்பட்டுள்ளார். யாழ்.சின்னக்கடைப் பகுதியில் ஆட்டிறைச்சிக் கடையினை நடத்தி தமிழ் மக்களுக்கு நீண்ட காலமாக சேவையாற்றிய இவரது நியமனம் வைத்தியத்துறையைப் பெருமைப்படுத்துவதாகவும் யாழ்.வைத்தியபீடத்திற்கு தலைவராக உள்ளிப் பரியாரி பஸ்தியாம்பிள்ளையை நியமிக்க நாம் முடிவு செய்ததாக யாழ் மாவாட்டப் பொறுப்பாளர் தெரிவித்தார். இவர்கள் எமது இயக்கத்திற்கு நீண்ட காலமாக ஆதரவு வழங்கிய காரணத்தால் மட்டுமல்ல, இவர்களது நியமனம் இனங்களுக்கான ஒற்றுமையை வளர்க்கவும் உதவும் என தாம் நம்புவதாகவும் யாழ் மாவாட்டப் பொறுப்பாளர் தெரிவித்தார்.

இவர்களது நியமனங்களை எதிர்த்து சில யாழ் வைத்தியசாலையில் பணியாற்றிய பிரெஞ்சு வைத்தியர்கள் ராஜினமா செய்ததை மாவாட்டப் பொறுப்பாளர் கண்டித்துள்ளார். சீனி முகமது ஒரு தலைசிறந்த அறுவைச் சிகிச்சை நிபுணர் என்றும் இதுவரை 5467 ஆடுகளை, 3364 மாடுகளை திறமையாக அறுவை செய்துள்ளார் என்பதே அவரது திறமைக்கு சான்று என்றும் இவரது 18 வருட அறுவைச் சிகிச்சை கருவிகள் ஒருபோதுமே கழுவப்படவிலலை என்றும் எதுவித தொற்றுநோய்களும் அந்த கருவிகளால் உருவானதற்கு சான்றுகள் இல்லை என்றும் மாவாட்டப் பொறுப்பாளர் பிரெஞ்சு வைத்திய நிபுணர்களை சாடியுள்ளார்.

### தமிழர்கள் துரோகிகளாகும் பெரும் அபாயம் தவிர்க்கப்பட்டது
## விசா வழங்குவோர் சார்பில் பெருமூச்சு

மூன்று நாள் விசாமுறை தளர்த்தப்பட்டதால் 14,627 துரோகிகள் நாட்டை விட்டு ஓடியதால் அதிகரித்த துரோகிகள் தொகை மீண்டும் விசா முறை அமுல்படுத்தப்பட்டதால் கட்டுப்படுத்தப்பட்டு விட்டது. இதன் மூலம் தமிழர்கள் முழுவருமே துரோகிகளாகும் மாபெரும் அபாயம் தடுக்கப்பட்டுள்ளதாக கனடாவில் வாழும் அமைப்பின் தலைவர் ஒருவர் கூறினார்.

தனது 1 அப்பா, 1 அம்மா, 1 மாமா, 1 மாமி, 2 பாட்டா, 2 பாட்டி, 7 குஞ்சியப்புகள், 7 குஞ்சாச்சிகள் சகிதம் வேலை எதுவும் இல்லாமல் வாங்கிய வீட்டிலிருந்து தனது சொந்தக் கார்களில் சொந்தக்காரர்களுடன் வந்து கொண்டிருந்த மற்றும் ஒரு அமைப்புத் தலைவர் தாய் நாட்டை விட்டு ஓடுபவர்கள் பச்சை, நீல, சிவப்புத் துரோகிகள் என்று கண்டித்தார்.

"உங்கள் குடும்பங்கள் யாபேரும் இங்குள்ளதால் அவர்கள் துரோகிகளாக கருதப்பட மாட்டார்களா" என்ற கற்பனை நிருபரின் கேள்விக்கு பதில் அளித்த அவர் "எனது உறவினர்கள் தற்போது வந்தாலும் நான் பிரச்சனைகள் தொடங்க முன்பே நாட்டை விட்டு வெளியேறியதால் அந்த விதிகள் என்னை எந்தவிதத்திலும் கட்டுப்படுத்தாது" என்று கூறினார்.

"இதே நேரம் தாய் நாட்டை விட்டு வெளியேறும் ஒவ்வொருவரும் பத்தாயிரம் ரூபா செலுத்துவதால் உங்கள் தமிழீழ அரசு பணம் பெறுகிறதே" என்ற கேள்விக்கு அவர்கள் வாங்கும் பணத்திற்கும் தங்களுக்கும் எந்த வித சம்பந்தமும் இலலை என்று மறுத்தார்.



படிப்பகம்

www.padippakam.com

## அவசர தணிக்கைக்குழு

கோட்டை கொடி பறந்ததும் தமிழ் ஈழம் கிடைத்தது போல் மகிழ்ந்த அவசரத்தில் தணிக்கை குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. கனடாவில் வெளிவரும் சகல பத்திரிகைகளும் இனிமேல் இத்தணிக்கைக்குழுவின் பரிசீலனையின் பின்னரே சுதந்திரமாக இயங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்தணிக்கைக்குழு அங்கீகரிக்காத சிற்றேடுகள் அனைத்தும் சிங்கள அரசின் கைக்கூலிப் பத்திரிகைகள் என தணிக்கைக்குழு நற்சான்றிதழ் வழங்கும். மேலும் இப்பத்திரிகைகளை விற்பனை செய்யும் நிலையங்கள் தணிக்கையாளர் குழுவினால் நியமிக்கப்பட்ட தடியர் படையாலும் தாடியர் படையாலும் மிரட்டப்படும். இத்தணிக்கைக்குழுவுக்கு முன்பு முருங்கைக்காய் விற்றுக் கொண்டிருந்த முருகேசு மொன்றியலிலும் கத்தரிக்காய் விற்றுத் திரிந்த கார்த்திகேசு ரொரன்ரோவிலும் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இத்தணிக்கை விதிகள் தமிழ் பத்திரிகைகளுக்கே விதிக்கப்பட்டுள்ளன என்றும் கனடாவில் விற்கப்படும் சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளை இவ்விதிகள் கட்டுப்படுத்தாது என்றும் இவ்வதிகாரிகள் தெரிவித்தனர்.

இதற்கு காரணம் வினவப்பட்ட போது "எங்களுக்கு தமிழே ஒழுங்காய் தெரியாது, இதில் ஆங்கிலத்தை எப்படி படித்து அறிவது?" என்று எதிர்க் கேள்வி கேட்டதனால் கேள்வி கேட்ட கற்பனை நிருபர்கள் பறந்துவிட்டனர்.

## கோட்டை டு கோட்டை Tourist Information

கோட்டையில் இருந்து கோட்டை வரை செல்லும் புகையிரதம் ஆறு இடங்களில் நிறுத்தப்படும்.

*பொல்காவலையில் வண்டி நிறுத்தப்பட்டு தமிழர்கள் ஆசனங்களில் இருந்து எழுப்பப்பட்டு பிக்பொக்கட் அடிக்கப்படும்.
*அநுரதபுரத்தில் வண்டி நிறுத்தப்பட்டு தமிழ் பெண்களில் தாலிக்கொடிகள் அறுக்கப்படும்
*மதவாச்சியில் நிறுத்தப்பட்டு மோதிரங்கள் உட்பட சகல எஞ்சிய தங்கங்களும் பிடுங்கப்படும்.
*வவுனியாவில் நிறுத்தப்பட்டு டேப் றெக்கோடர்கள், ரேடியோ போன்ற மின்னணுக் கருவிகள் வாங்கிக் கொல்லப்படும்
*பரந்தனில் நிறுத்தப்பட்டு ஷேர்ட், பான்ட் வகையறுக்கள் கழற்றப்படும்
*ஆனையிறவில் வைத்து மெழுகுதிரி, தீப்பெட்டிகள் அபகரிக்கப்படும்
*யாழ் கோட்டையை புகையிரதம் வந்தடைந்ததும் அனைத்துப் பிரயாணிகளும் இரண்டு பவண் தங்கம் மேலதிக கட்டணமாக மிரட்டிப் பறிக்கப்படும்.

## மறுமலர்ச்சிப் பல்கலைக்கழகம்

பின்வரும் புதிய கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

**1.பொருள் வளத்துறை**
கற்கை நெறிகள்
1.பாதுகாப்பாக கொள்ளையடித்தல்
2.கப்பம் வாங்குதல்
3.தங்கம் சேகரித்தல்

ஆறுமாத கால இந்த நெறிகள் பலவருட இயக்க பாரம்பரியம் பெற்ற விரிவுரையாளர்களால் நடத்தப்படும். விண்ணப்ப படிவத்தில் பாடநெறிகளுக்கு வழங்கப்படும் பணம் வீரசாகசம் செய்து அல்லது உண்டியல் மூலம் வசூலிக்கப்பட்டதாக இருப்பதற்கான சான்றுகளும் தேவை. இயக்க உறவினர்களின் நற்சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும். கோல்ட் விசா காட் பெற்ற உறவினர்களாயின் முன்னுரிமை வழங்கப்படும்.

**2.டாக்டர் பட்டம் வழங்கும் அரிய திட்டம்** ஒன்றை மறுமலர்ச்சிக் கழக பல்கலைக்கழக வேந்தர் அறிவித்துள்ளார். எதுவித சிரமமும் இன்றி வழங்கவுள்ள இந்த அற்புத திட்டம் பற்றிய தகவல்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

புறநானூறு படைத்த வீரமறவர்களுக்கு வீட்டுக்கு நேரடியாக டாக்டர் பட்டம் வினியோகம் செய்யப்படும். சகல துறைகளிலும் அவர் டாக்டராக விளங்கலாம். மருத்துவ துறை உட்பட என்பதை தமிழ் மக்கள் கவனிக்கவும்


வீரமறவர்களின் உறவினர்கள் கோல்ட் விசா காட் பெற்றவர்களுக்கு தபால் மூலம் இலவசமாக வழங்கப்படும்.

வெளிநாட்டு உண்டியல்காரர்களுக்கு நிதியியல் முகாமைத்துவத்தில் டாக்டர் பட்டம் வழங்கப்படும்.

**அரசியல் அறிவு படைத்த எவருக்கும் அரசியலில் டாக்டர் பட்டம் கண்டிப்பாக வழங்கப்படாது.**

இவ்வார ஸ்பெஷல்
500 ரூபா கட்டி பௌதீகதுறையில் டாக்டர் பட்டம்
பெறுபவர்களுக்கு இரசாயனத்துறையில் டாக்டர் பட்டம் இலவசம்.
முந்துங்கள்
சொற்ப கையிருப்பே உண்டு.

## உரிமைகீதம்




## பல்கலைக் கழகங்களில் தமிழர் படிக்க கூடாது

### பிரபல பல்கலைக்கழகங்களின் முன் ஆர்ப்பாட்டங்கள் நடத்த முஸ்தீபு

எட்டாம் வகுப்புக்கு மேல் படிக்க தேவையில்லை என்று ஈழத்தில் அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து மனமகிழ்ந்த வீரர்கள் இந்நடைமுறையை கனடாவிலும் கடைப்பிடிப்பது நல்லது என கருத்துத் தெரிவித்தனர். இதன் மூலம் கனடா பல்கலைக் கழகங்களுக்கு படிக்க நினைப்பவர்களும் தமிழ் துரோகிகள் என்றே கணிக்கப்படலாம் என மறுமலர்ச்சி கழக அமைப்பாளர் திரு.அறிவு எஸ்.எஸ்.சி தெரிவித்தார். இதை எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள் நடத்தவும் தாங்கள் முடிவு செய்துள்ளதாகவும் பல்கலைக்கழங்கள் கனடாவில் எங்கெங்கு இருக்கின்றன என்பது தமக்கு தெரியாததால் இப்போராட்டத்தை நடத்த சிறிது காலம் தாமதமாகும் என்றும் தெரிவித்தார். இது பற்றி செல்வி சரஸ்வதி என்.சி.ஜி.ஈ விடுத்த அறிக்கையில் வெகுவிரைவில் கனடிய பல்கலைக்கழகங்களை மறுமலர்ச்சிக் கழகத்திடமே ஒப்படைக்க வேண்டும் என்றும் கேட்டுள்ளதாகவும் தலைவர் எவ்வழியோ குடிகளும் அவ்வழி என்றும் கூறியுள்ளார்.

அன்பு வாசகர்களே,
கனடாவில் வெளிவரும் பேரேடுகளில் வெளியாகும் பல செய்திகள் கற்பனைபோல் தோன்றும் போது, கற்பனைப் பத்திரிகையான கற்பனாவில் ஒரு **உண்மைச்** செய்தியாவது வெளியிட வேண்டும் என்ற துடிப்பில் இங்கு வெளிவந்த பேரேடு ஒன்றில் மூழ்கி குளித்து எடுத்து **முத்து** இது....

விஸ்பன் கொடியோ உவர்ப்பு
ஆம்ஸ்ராடாம் நிறை துவர்ப்பு
லண்டன் கொடி மிகப் புளிப்பு
புது டில்லி கடும் உறைப்பு
கொழும்புக் கொடி அதி கசப்பு
ஆறுவதாய் சுவையாய் இனிப்புக் கொடி
அரும்பெரும் சுவையளிக்கும் புலிக்கொடி



படிப்பகம்

www.padippakam.com

## கியுபெக்கர்கள் வீரா "வேஷம்"

### ஒன்ராறியோ சென்றவர்கள் ஹம்போர்கருக்காக சுதந்திரத்தை விற்றவர்கள்.

கியுபெக் மாநிலத்தில் பல வருடம் வசிதது வந்தோர் வருடாவருடம ஒன்ராறியோவுக்கு தப்பிச் சென்று விடுகிறார்கள் என்றும் இவர்கள் அனைவரும் கியுபெக் துரோகிகள் என்றும் கியுபெக் விடுதலை முன்னணி குற்றம் சாட்டியுள்ளது. தப்பி ஓடுபவர்கள் பிரெஞ்சு ஃப்ரைஸை விட்டு ஹம்போர்கருக்காக நாட்டை விற்பவர்கள் எனவும் இத்துரோகிகளால் தான் கியுபெக் போராட்டம் பின்தள்ளப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்தது.

இனிமேல் கியுபெக்கை விட்டுச் செல்பவர்கள் இரண்டு கிழமை சம்பளக் காசோலைகளையும் அவர்களுடைய அப்பாட்மென்டுகளையும் தம்மிடம் ஒப்படைக்க வேண்டுமென விடுதலை முன்னணி அறிவித்துள்ளது.

இவ்வறிவிப்பை தொடர்ந்து கியுபெக்கிலிருந்து இடம் பெயர்ந்து ரொறன்ரோ சென்றவர்களுக்கு கிலி பிடித்துள்ளது. கியுபெக்கில் இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கும் தமது உறவினர்களிடமிருந்து பத்தாயிரம் டொலர்களை கப்பமாக தரும்படி விடுதலை முன்னணி கேட்க கூடுமென அஞ்சப்படுகிறது.

விழுந்தடித்து ரொறன்ரோ சென்ற கியுபெக்கர்கள் வேலையின்மையாலும் டவுன்பேமன்ற் பிரச்சனைகளாலும் மீண்டும் கியுபெக் திரும்பி வருகின்றனர். இவர்கள் தங்களுடன் நின்று போராடியிருக்கலாமெனவும் அப்படி போராடியிருந்தால் எப்பவோ கியுபெக் கிடைத்திருக்கலாம் எனவும் முன்னணி குற்றஞ் சாட்டியுள்ளது. எப்படியிருப்பினும் ஹம்போர்கருக்காக கியுபெக்கை விற்றவர்கள் துரோகிகளே எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கோட்டை கொடியேற்ற விஞ்ஞாபனம்

பேரன்புடைய பக்த கேடிகளே!

எதிர்வரும் புதன்கிழமை காலை 10.30 மணிக்கு வரும் ராகு கால மரண யோக சுப முகூர்த்த வேளையில் கொடியேற்ற வைபவத்துடன் திருவிழா ஆரம்பமாகி கொடி இறக்க வைபவத்துடன் திருவிழா இனிது முடிவடையும்.

விசேட திருவிழாக்கள்

*முதலாம் திருவிழா: கோட்டையில் கொடியேற்றம்
ஸ்ரீலஸ்ரீ தானுக் குருக்கள் கொடிக் கம்பத்தில் கொடியேற்றுவார்.

*ஆறும் திருவிழா: வாண வேடிக்கை
சாமி செவன் வாணம் உட்பட பல புஸ்வாணங்களும் வகுவன் வெடிகளும் வாணவேடிக்கையில் இடம் பெறும்.

*ஏழாம் திருவிழா:சப்பரத் திருவிழா
தலைவரின் பெரிய அளவிலான கட் அவுட் ஒன்று சப்பரத்தில் வைத்து பக்தர்களால் இழுத்து வரப்படும். (இக்கண்கொள்ளாக் காட்சியை காணத் தவறாதீர்)

*எட்டாம் திருவிழா: வேட்டைத் திருவிழா
மற்ற இயக்கங்களை சேர்ந்த அப்பாவி சிறுவர்களும் துரோகிகள் என குற்றம் சாட்டப்பட்ட அப்பாவிகளும் காளிக்காய் வேட்டையாடப்படுவர்,

*ஒன்பதாம் திருவிழா: தெப்பத்திருவிழா
கோட்டையைச் சுற்றியுள்ள அகழியில் விசேடமாக அமைக்கப்பட்ட மேடையில் தெப்பத்திருவிழா நடைபெறும்

*பத்தாம் திருவிழா: பூங்காவனம்
மாலை சுப்பிரமணியம் பூங்காவில் எம் பெருமான் இளைப்பாறுவார்.

*பதினொராம் திருவிழா: மஞ்சம்
எம் குலதெய்வம் தன் துணையுடன் மஞ்சத்தில் எழுந்தருள்வார்

*பன்னிரண்டாம் திருவிழா: தீர்த்தமும் கொடியிறக்கலும்
நண்பகல் பண்ணைக் கடற்கரையில் சுவாமி தீர்த்தம் அடிப்பார்
மாலை பிரதான குருக்கள் ரெறன்ஸ் பெரேராவுடன் உதவிக் குருக்கள் டென்சில் கொப்பேகடுவ தரையில் பக்தகேடிகளின் நெருக்கடி காரணமாக விமானத்திலிருந்து கொடியை இறக்கி வைப்பதுடன் விழா நிறைவுறும்.

திருவிழாவின் போது பக்தகோடிகளின் வசதிக்காக உண்டியல்காரர்கள் உங்களிடம் தேடி வருவர். மனமுவந்து ½ பவுண்களை கொடுத்து மேலும் திருவிழாவை சிறப்பித்து அம்மான் அருள் பெற்று ஏகுமாறு வீரமாகாளி பக்தர்களை வேண்டுகிறோம்.

மேற்படி கோயில் நிர்வாகிகள்

## க.அ.சே.இ.ஒ.ச ஆரம்பிக்கப்பட்டது
## புதிய சங்கம் உதயம்

தாய்ச்சங்கத்தில் இருந்து பிரிந்து சென்ற சேய்ச் சங்கத்திலிருந்து பிரிந்து பேத்திச் சங்கம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இது தாய்ச்சங்கத்தின் வளர்ப்புச் சங்கம் போலவே நின்று போராடுவோரை ஆதரிக்கும் அமைப்பாகவே இயங்கும் என்று நம்பப்படுகிறது. இவ்வமைப்பிற்கு கனடா அனைத்து சங்கங்களும் சேர்ந்து இயங்கும் ஒற்றுமைச் சங்கம் (கஅசே.இ.ஒ.ச) என்று பெயரிடப்பட்டுள்ளது. இச்சங்கமும் நின்று போராடுவோரை ஆதரிக்கும் நடுநிலைப் பத்திரிகை ஒன்றை வெளியிடப் போவதாக தெரிவித்துள்ளது.

## ஆட வாரீர்! போராட வாரீர்!
## உரிமை டிஸ்கோ

தமிழீழ அபிமானிகளே,

எமது பிரிவினால் நடத்தப்படவுள்ள உரிமை டிஸ்கோவில் கலந்து டிஸ்கோ ஆடி மகிழுங்கள்!

விசேட மின்னொளியில் புகையடித்தவாறு ஆட்டம் ஆடப்படும்.

டிஸ்கோ ஆட்டத்திற்கு முன் ஒரு செக்கன் மௌன அஞ்சலியும் செலுத்தப்படும்.

உரிமை டிஸ்கோவில் கலந்து டிஸ்கோ ஆடி விடுதலைக்கு உங்கள் பங்களிப்பை செய்ய வாரீர்

## தாயகத்தைப் படிக்க மாட்டோம்

### நின்று போராட முடிவு செய்தோர் சூளுரை

நின்று போராடுவோரை ஆதரிக்க முடிவு செய்து அவர்களது அமைப்பின் கொடிக்கம்பத்தின் கீழ் கனடாவில் வாழும் நாற்பதாயிரம் தமிழரில் 39,999 தமிழர்களும் ஓடிப்போய் நின்று இணைந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சி தமிழ் மக்கள் அனைவரும் ஒரு கொடியின் கீழ் திரண்டு விட்டதை காட்டி விட்டதாக அமைப்பாளர்கள் மகிழ்ந்தனர்.

வெகுகாலமாக நின்று போராடும் போராளிகளை நாங்கள் மதிக்கும் முகமாகவும் எமது போராட்டத்தை ஆதரித்தே தீருவது என்று உறுதியாக நினைத்து விட்டதாலும் இங்குள்ள அமைப்பு ஒன்றில் தாங்கள் சேர்ந்து கொள்வதாக 39,999 தமிழர் சார்பில் தெரிவிக்கப்பட்டது. எவ்வளவு காலம் தான் நடுநிலை என்று மதில் மேல் பூனைகளாக இருப்பது என்றும் விசனம் தெரிவிக்கப்பட்டது.

கனடாவில் வாழும் மக்கள் அனைவரும் இப்போது எமது அமைப்பிலேயே இருப்பதால் தமிழீழம் விரைவில் சாத்தியம் என்று இணையாதிருக்கும் ஒருவருக்கு தெரிவிக்கப்பட்டது. இன்னும் இணையாதிருப்பவர் தாயகம் ஆசிரியர் ஒருவர் தான் என்பது குறிப்பிடத்தக்கது. தங்கள் அமைப்பிற்கு மக்களிடம் ஆதரவு இல்லை என்று சொல்பவர் இனி என்ன சொல்லப் போகிறார்கள் என்று இணைந்து கொண்ட ஒருவர் மகிழ்ந்தார்.

தாயகம் ஆசிரியர் எங்களோடு இணைந்து கொள்ள வேண்டும் என்று ஒருவர் அறைகூவல் விடுத்ததுடன் விரும்பினால் எங்களுடன் இணைந்த பின் பிரிந்து சென்று பத்திரிகை ஆரம்பிக்க அவருக்கு உரிமை வழங்குவோம் என்றும் கூறினார்.

ஒரு கொடியின் கீழ் மக்கள் இணைந்து கொண்டதும் கொடிக்கம்பத்தின் கீழ் வைத்து தாயகம் பத்திரிகை தீயிட்டுக் கொழுத்தப்பட்டது. விற்பனை செய்வதற்காக வைக்கப்பட்டிருந்த அனைத்து தாயகம் பிரதிகளையும் ஒருவர் தானே வாங்கி வந்து தீயிடுவதற்காக அன்பளிப்பு செய்தார். தாயகம் எரிக்கப்பட்டதை கண்டதும் ரொம்ப உணர்ச்சி வசப்பட்டு எரிந்து கொண்டிருந்த சோதியில் சங்கமிக்க முனைந்து பாய்ந்தோடி வந்த இன்னொருவரை கூட்டத்தினர் சமாதானப்படுத்தி நாலு சாத்து சாத்தி அழைத்துச் சென்றனர்.

கோட்டை கொடியேற்றத்தின் பின் கொடி சம்பந்தமாக மக்கள் மகிழ்ந்த அடுத்த சம்பவம் இது என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

தாயகம் பத்திரிகை எரிக்கப்பட்டதால் இனிமேல் சகல பத்திரிகைகளையும் பயமின்றி நிம்மதியாக விற்கலாம் என சில வியாபார நிறுவனங்களின் அதிபர்கள் நிம்மதிப் பெருமூச்சு விடுவதை அவதானிக்க கூடியதாக இருந்தது.

இந்த நிகழ்ச்சியை பலர் சந்தோசமாக பயம் எதுவும் இன்றி வீடியோப்படம் பிடித்ததை காணக் கூடியதாக இருந்தது.

## வாசகர் கடிதம்

பாப்புவா நியுகினியில் உள்ள எனது வீட்டுக்கு நீங்கள் வாரந்தோறும் உங்கள் பத்திரிகையை விநியோகிப்பது குறித்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். நடுநிலைப் பத்திரிகை என்ற பெயரில் விடுதலைப் போராட்டத்தை கொச்சைப்படுத்துவோரின் முகமூடியைக் கிழித்து கற்பனை வெற்றி நடை போடுவது பெருமிதமடைகிறேன். நாட்டை விட்டு வெளியே வந்தாலும் எங்கள் விடுதலை உணர்வை கூர்மைப்படுத்தி வரும் உங்களை நான் பாராட்டுகிறேன்.

ஒரு தாழ்மையான வேண்டுகோள் நீங்கள் எங்கள் தலைவர்களினதும் தியாகிகளினதும் மூவர்ணப் படங்களை மூன்றும் பக்கத்தில் வெளியிடலாமே. உங்கள் பத்திரிகை அவ்வப்போது வெளிவருவதால் என்னால் காத்திருக்கும் ஆவலைக் கட்டுப்படுத்த முடியவில்லை. தயவு செய்து உங்கள் பத்திரிகையை ஒவ்வொரு நாளும் காலை, நண்பகல், மாலை பதிப்புகள் வெளியிட்டு எங்களுக்கு வீடு தோறும் விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யுங்கள். உங்கள் பத்திரிகையை எத்தனை ரூபா கொடுத்தும் வாங்க காத்திருக்கிறோம். எங்களை ஏமாற்றி விடாதீர்கள். ஒசிப்பத்திரிகை என்ற வடுவைத் துடைத்தெறியுங்கள்.

இத்துடன் கொங்கோ காட்டில் இருக்கும் எனது மாமா, வடதுருவத்தில் வசிக்கும் எனது மைத்துனர் ஆகியோரின் விலாசங்களை அனுப்பி வைத்துள்ளேன். அவர்களுக்கு உங்கள் பத்திரிகைகளை விநியோகம் செய்யுங்கள்.

அல்வை ஆறுமுகம், பாப்புவா நியுகினி

(உங்கள் தியாக, வீர உணர்வுகளுக்கும் சிந்தனைத் தெளிவுக்கும் தலைவணங்குகிறோம். உங்களைப் போல் பல பேர், சீ நீர் ஒருவரே போதும், இருந்தால் "தமிழர் உலகம்" உருப்படும். வர்ணப் படங்கள் வர்ணம் கிடைத்ததும் வெளியிடப்படும். அவ்வப்போது பத்திரிகை வெளியிடுவதில் உள்ள சிரமங்களை நீங்கள் அறிவீர்கள். ஒரு பத்திரிகையையே மூன்று நேரமும் சாப்பாட்டுக்கு முன்னும் பின்னும் படித்து விடுதலை உணர்வை கூர்மைப்படுத்தவும். ஐயோ, எதையும் கேளுங்கள், ஆனால் பணத்துக்காக விற்கும்படி கேட்காதீர்கள். நாங்கள் பணத்துக்காக எதையும் விற்பவர்கள் அல்ல. நாங்கள் பணம் வாங்காமலேயே விற்று விடுவோம். உங்கள் உறவினருக்கு பத்திரிகை அனுப்ப கொங்கோ குரங்குகளிடமும் துருவ கரடிகளிடமும் கேட்டுள்ளோம். அவை வீடு வந்து விநியோகிக்கும். அவை வரும் போது உங்கள் மாதாந்த வரியை செலுத்தி எங்கள் போராட்டத்துக்கு உங்கள் பங்களிப்பை செய்து மகிழவும்)

## சிறுவிளம்பரம் சிறுவிளம்பரம் சிறுவிளம்பரம் சிறுவிளம்பரம் சிறுவிளம்பரம்

பாக்தாத் பேரழகிக்கு மணமகன் தேவை.

எமது தனிப்பெருந்தலைவன் சதாம் பிறந்த வீரம் செறிந்த மண்ணான பாக்தாத்தில் பிறந்த பேரழகிக்கு வீரமும் விடுதலை உணர்வும் மிக்க மணமகன் தேவை. சீதனமாக வீட்டுக்கு டவுன் பேமன்ற், பெல் கனடா பில், கிறடிற் காட் பில் போன்றன முதற் குழந்தை கிடைக்கும் வரை வழங்கப்படும். தொடர்பு: பெட்டி 35

எங்கள் ஆசிரியர் குழுவில் பணியாற்றிய அசிங்கன் அவர்கள் விலகி 'சொப்பனு' என்ற புதிய பத்திரிகையை ஆரம்பித்துள்ளார். அவரது பத்திரிகைக்கும் எமக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை என்ன இத்தால் அறியத் தருகிறோம். இருப்பினும் சொப்பனுவின் விநியோகம், பாதுகாப்பு என்பவற்றை எமது துணை நிறுவனமான எடுபிடி, அடிதடி அன்கோ மேற்கொள்ளும் என்று வாசகர்களுக்கு அறியத் தருகிறோம். சொப்பனுவில் வரும் கருத்துக்களுக்கு நாங்கள் பொறுப்பல்ல.

இவ்வண்ணம்
தா.டிவாலா
நிர்வாக இயக்குனர்.

சர்வதேச தமிழர் இயக்கமும்
இடைத்தமிழ் சங்கமும் இணைந்து
வழங்கும்
**பண்பாட்டு வகுப்புகள்**
ஆரம்பம்
பண்பாக பேசவும்
ஜனநாயக கருத்துக்களை மதிக்கவும்
பத்திரிகை சுதந்திரத்தை ஏற்றுக்
கொள்ளவும்
பயிற்றுவிக்கப்படும்.
தாடி வைத்தவர்கள்
மட்டும் அனுமதிக்கப்படுவார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

கற்பஞ வெளியிட்டு விடுதலைப் போராட்டத்தை கொச்சைப்படுத்துகிறோம் என்ற குற்றச்சாட்டை நாம் ஏற்றுக் கொள்கிறோம். இங்கும் பலர் முழுநேரமாக பணம் சேர்ப்பது, பத்திரிகைகளை மிரட்டுவது, வினியோகஸ்தாகளை தாக்குவது உட்பட பல வடிவங்களில் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்கிறார்கள். இவர்களுக்கு வீரமாக வணக்கம் செலுத்துகிறோம். இவாகளின் தியாகத்திற்கு தலைவணங்கி நிற்கிறோம்.

நின்று போராடும் சக போராளிகள் சொல்லொணுத்துன்பத்துக்கும் இன்னல்களுக்கும் மத்தியில் வாழ்ந்து மண் மீட்புப் போராட்டத்தில் மடியும் போது வெறுமனே இங்கிருந்து போராட்டத்தை ஆதரித்துக் கொண்டிருப்பதை விட களத்தில் நின்று போராடும் போராளிகளுடன் ஈழத்திற்கு சென்று போராட்டத்தை பலப்படுத்துவதே சரியானதாகும். இதனுல் வெளிநாடு சென்றவாகள் துரோகிகள், சோற்றுக்காக சுதந்திரத்தை விற்றவர்கள் என்ற அவப்பெயரும் போகுமல்லவா?

எனவே இங்கிருந்து வீரமாக பேசுவதை விட போராட்டத்தில் கலந்து கொள்ள திரும்பிச் செல்வது மேல் என நினைத்தோரைப் பாராட்டி ஒரு பாராட்டுப் பத்திரம் அனுப்பலாம் என்றால் அப்படி சென்றவர்கள் யார் என்று தெரியவில்லை. இங்குள்ள இயக்கங்கள், சங்கங்களில் கூட அப்படி இருப்பவர்கள் யாரும் இருப்பதாக எங்களுக்கு தெரியவில்லை. எனவே கீழ்க்காணும் பாராட்டுப் பத்திரத்தை அவ்வாறு சென்றவர்களுக்காக வழங்க ஆசைப்பட்டு இதில் பிரசுரித்துள்ளோம்

மாண்புமிகு தமிழ் மறவன்/மறவி, வீரச்செம்மல்

............ ........................................................................

அவர்கள், ஈழத்தில் அப்பாவித் தமிழ் மக்கள் படும் இன்னல்கள் கண்டு உளம் வெந்து, தனது வெளிநாட்டு போகங்களையும், உறவுகளையும் துறந்து தாயக மண்மீட்பே தன் வாழ்வின் நோக்கமாய் கொண்டு ஈழம் திரும்பி தான் ஆதரிக்கும் இயக்கத்துடன் நின்று போராட தாயகம் திரும்பியதைப் பாராட்டி வெளிநாடுகளில் இன்னும் வாழும் தமிழீழ ஆதரவாளர்களின் சார்பில் இப்பாராட்டுப் பத்திரத்தை தங்க பதக்கமாக கருதி அவருக்கு வழங்குவதில் பெருமை அடைகிறோம்.

மண்மீட்புப் போரில் அவர் உயிர் நீப்பின், கற்பஞவில் ஒருபக்க அஞ்சலி செலுத்துவோம் என உறுதி கூறுகிறோம்.

வாழ்க தமிழ்! வாழ்க எம் தலைவன்!!

## கட்டுவனில் கடுஞ்சமர்

நேற்று மாலை புன்றாலைக்கட்டுவனில் நடைபெற்ற வேலிச்சண்டையில் இருவர் படுகாயமடைந்தனர். இராணுவம் நடத்திய தாக்குதலை அடுத்து பல வீடுகள் தரை மட்டமாகியுள்ளதால் பலர் தங்கள் காணிகளுக்கு எல்லை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

பல காணிகளுக்கு எல்லைகள் தெரியாததால் எல்லைகள் அரக்கப்படும் என்ற அச்சத்தில் பலர் வேலி அமைத்து வருகிறார்கள். இதனுல் கிழுவந்தடிகளின் விலை அதிகரித்துள்ளது.

இவ்வாறான ஒரு சம்பவத்தின் போது எல்லைக்கல் விவகாரத்தினால் நடந்த மோதலில் பல நவீன ரக ஆயுதங்கள் பாவிக்கப்பட்டன. சாம் ஏவுகணை ஒன்று பாவிக்கப்பட்டதால் இடிபாடுகளுக்குள் எஞ்சியிருந்த இரு மலசலகூடங்கள் தகர்க்கப்பட்டன.

அவ்வழியால் வந்த போராளிகள் அது தங்கள் காணிகள் என்றும் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தில் இருந்து உடனடியாக வெளியேறி விட வேண்டும் என்றும் எச்சரித்ததை அடுத்து மோதலில் ஈடுபட்டவர்கள் ஒன்றாக அகதி முகாம்களுக்கு சென்றனர்.

## சுத்தர் பாடல்

இலக்கிய சோலை

நின்று போராடு! தம்பி! நின்று போராடு!
சென்று போராடு! தம்பியுடன் சென்று போராடு!
கொன்று போராடு! அவனைக் கொன்று போராடு!

அன்று போராடி எம்மை அலட்சியம் செய்தோரை
கொன்று போராடு! தம்பி வென்று போராடு!

நன்று போராடு! தம்பி நன்று போராடு!
என்றும் போராடும் எம்மக்கள் என்றும்
சந்து பொந்தெங்கும் வெந்து சாகட்டும்
நின்று போராடு! சென்றியில் நின்று போராடு!

இன்று இங்கிருக்கும் நானும் உன்னோடு
வந்து போராடினால் நன்றென்று சொல்லாதே! இங்கே
தொன்று தொட்டேயுள்ள துரோக கும்பலிடம்
என்றும் நான் காசு சேர்க்க வேணும்!
காசு சேர்க்க வேணும்!
மன்றம் அமைத்தும் நான் இங்கு போராடுவேன் நீ
நின்று போராடு! தம்பியுடன் சென்று போராடு!

கொன்று போராடு! அவனைக் கொன்று போராடு!

ஈழத்து சுத்துமாத்தனர்

## திரை தந்த தேள் அமுது

தமிழீழமெங்கும்

வெற்றி வீரநடை போட்டுக் கொண்டிருக்கிறன்.



A Fort In The Treasure Island........
A Few Guards to Protect.....
A Mission Named Operation Eagle
To Evacuate......

Only One Man Can Stop That..

He Is Invisible ...
He Is Invincible.......

He Cares Nothing..
He Dares Nothing....
He Destroys Everything..
Yes. He Is A Destroyer.

He Is A Man Born TO Fight...
Only to fight!
Nothing Can Stop Him.

# THAMBO

## You Only Live Twice

Directed By M.A.Hathaya
Executive Producer: Mr & Mrs Bridge Singo
Stunts: M.O.S.Sad Public Relations: Gopala Veera Maran & Co.
Worldwide Distribution: Kuttu and Tamil International
Filmed in exotic locations like Tel Aviv, Uttar Pradesh and Colombo Hilton

பத்திரிகைகள் பாராட்டுகின்றன

உயிரோடு டயர் போட்டுக் கொழுத்தும் காட்சிகள் தத்ரூபமாக படமாக்கப்பட்டுள்ளன மருதியில் வழிபாட்டில் ஈடுபட்டிருந்தவர்களை சுட்டுக் கொல்லும் காட்சிகளை மர்மமான முறையில் படமாக்கிய இயக்குனர் பாராட்டுக்குரியவர், வெளிநாட்டில் செய்த Shootingநன்றாக இருக்கிறது.

ஈழநாசம் பத்திரிகையில்

கோட்டை நட்சத்திரத்தில் பிறந்த தம்போ கோட்டையைப் பிடிக்கும் வேட்டையில் ஈடுபட்டு மக்களுக்கு வேட்டை விளைவிக்கும் காட்சி வியக்க வைக்கிறது.......

சோதி விருூான பரிபாலினி பத்திரிகையில்

எல்.ரி.ரி.ஈ தயாரிப்பில்

### இனிய உறவு பூத்தது

ஈரோஸின் சோகக்கதை

தொலைபேசிப் போராளிகளின்

### உன்னைச் சொல்லி குற்றமில்லை

வீரசாகசங்கள் நிறைந்த படம்

வசூலில் சாதனை படைக்கிறது

உண்டியல்காரர் மூவிஸ் பெருமையுடன் அளிக்கும்

### நீங்களும் ஹீரோதான்

சமாதானம் + ஜனநாயகம் பிலிம்சாரின் வெற்றிப்படைப்பு

### அது அந்தக்காலம்..

மரணித்த மக்கள் புரடக்ஷன்ஸ்

### அஞ்சலி

இது போராளிகள், இலங்கை இராணுவம், அமைதிப்படையின் கூட்டுத் தயாரிப்பு



"கற்பஞ" அரைகுறை அன்கோவினுல் அவசர அவசரமாக வெளியிடப்படுகிறது. பிரதம ஆசிரியர்: குரங்கன், ஆசிரியர் குழு: வி.சரன், சொ.றியன் சித்திரம்: வி.சித்திரா தொடர்புகளுக்கு தொலைபேசி இலக்கம் தரப்படமாட்டாது. உங்கள் கருத்துக்களை உங்களுடன் வைத்து கொள்ளவும்.



படிப்பகம்